# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## புதிய பாடுகளை 'உள்ளத்தின் சமாதானம்' வென்றிடும்!

ஒரு புது துன்பத்தை சந்திப்பது, பொதுவாக எல்லா மக்களுக்கும் பயம், கவலை! ஆனால், கிறிஸ்துவை சார்ந்து வாழும் தேவ மக்களுக்கோ, அது ஓர் பரவச அனுபவமாயிருக்கும்! ஏனெனில், அந்த துன்பத்தை சந்தித்து வெற்றி சிறப்பது, அவர்களின் பங்கல்ல... அது, அவர்களுக்கு தேவனே செய்து முடிக்கும் அவரது பங்கு என அறிந்திருக்கிறார்கள்!

இவர்கள் செய்வதெல்லாம், தங்கள் ஜெபத்தில் கர்த்தருடைய வருகைக்காக காத்திருந்து, அவருடைய பிரசன்னத்தில் ..... நேற்று வரை தேவன் தங்களுக்குச் செய்த 'சகல அற்புதங்களையும் நினைவுகூர்ந்து' மகிழ்வுடன் தேவனைப் புகழ்வதேயாகும்! (லூக்கா.19:37). இரண்டாவதாக, இப்போது ஏற்பட்ட புதிய துன்பத்தால், தங்கள் 'உள்ளத்தின் தெய்வ சமாதானம்' தங்களைவிட்டு அகன்று விடாமல், அவர் சமூகத்தில் அதைப் பாதுகாத்துக்கொள்வதுமே ஆகும்! (வச.38). இவ்வாறு உருவாகிய பரலோக சூழலில், கர்த்தர் கண்டிப்பாய் வாசம் செய்வார்..... ஸ்தோத்தரிக்கப்பட்ட ராஜாவாய் வரும் கர்த்தர், உன்னதத்திலே மகிமை உண்டாகும்படி, இப்போதுள்ள உங்கள் துன்பத்தில், மாபெரும் வெற்றியை 'மீண்டுமாய்' நிலை நாட்டுவார்! (வச.38). அல்லேலூயா!

-tr

பெட்டகம் 19 நவம்பர் 2017 பரல்கள் 11



## சூழ்நிலையின் மத்தியில் "அவரை காணும்" கண் வேண்டும்!

துன்பம், வியாகுலம் சூழ்ந்த நிலையில், சத்தமிட்டு ஜெபிக்கும் மாந்தர்கள் பலர் உண்டு! ஆகிலும், இயேசு அவர்களின் கிட்ட வந்து "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?" என கேட்கும்போது, **"இந்த சூழ்நிலை என்னை விட்டு நீங்க வேண்டும்!"** என்றே கூறுகிறார்கள்! அதுபோலவே, எரிகோவின் வீதியிலிருந்த ஒரு பிச்சைக்காரன், அவன் குருடனாயிருந்து பிச்சை கேட்டான். "இயேசு போகிறார்" என அறிந்து மிக அதிகமாய் சத்தமிட்டு கூப்பிட்டான்! இயேசு தயக்கத்துடன் கிட்ட வந்து "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?" என கேட்க, அவனோ "எனக்கு பணம் வேண்டும் அல்லது பிச்சையெடுக்கும் சூழ்நிலை மாற வேண்டும்!" என கேட்காமல் "ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும்!" என்றே கேட்டான். உடனே பார்வையடைந்த அவனை, **'உன் விசுவாசம்' உன்னை இரட்சித்தது** என அறிவித்தார்!

மெய்யான இரட்சிப்பு, சூழ்நிலை விலகுவதல்ல! அந்த சூழ்நிலையில் நாம் "தேவனை காண்பதே" இரட்சிப்பு! தத்தளிக்கும் படகருகில் வந்து "நான்தான்" என கூறி, படகில் ஏறியதும் தத்தளிப்பு நின்றது! (மாற்கு.6:50). எல்லோரையும்போல், சூழ்நிலையாகிய 'கல்லறைக்குச் சென்று அழாமல்' இயேசுவின் பாதத்தில் வீழ்ந்த மரியாளுக்கு, லாசருவின் உயிர்த்தெழுதல் நிகழ்ந்தது! (யோவான்.11:31,32).அவன், 'பார்வையடையாமல்' தன் பிச்சை எடுக்கும் "சூழ்நிலையின் பின் சென்றான்" என இராமல், அவன் கண் திறந்து **'அவரைக் கண்டு'** "அவருக்குப் பின் சென்றான்" என்ற ஜீவ வழியையே நாமும் எக்காலத்தும் நாடுவோமாக!! *-Ed*

---

**பிழை திருத்தம் :** *கடந்த அக்டோபர் மாத, Editor (-Ed) செய்தியில் சங்கீதம்.107 - பதிலாக 117 - என பிரசுரித்ததற்கு வருந்துகிறோம்.*

### முக்கிய அறிவிப்பு

2018 'பரலோக பொக்கிஷங்கள்' வருட சந்தா ரூ.140/– தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்க்கண்ட வங்கி கணக்கிற்கு டிசம்பர் 20–ம் தேதிக்குள் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். (அரசின் GST வரி காரணத்தால் அதிக விலை கூடியதற்கு வருந்துகிறோம்). ஒரே விலாசத்தில் 3பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.120/– அயல்நாடு ஒரு பிரதி ரூ.800/– அனுப்ப வேண்டும். புதுப்பித்துக்கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

ஆவிக்குரிய விழிப்பூட்டும் ! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

கடித தொடர்பு : **பரலோக பொக்கிஷங்கள்**
207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India
Cell 98430 - 49935 Ph (O) 0452 - 2662306, (H) 0452 - 2661177
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com, cfcindia.com/tamil

## 'சுயலாப' மாந்தர்கள், ஜீவ தேவ சபையில் நிலைநிற்பதில்லை!

**ஆ**தி சபையில் காணப்பட்ட வல்லமையின் இரகசியம் 'அவர்கள் பரிசுத்தாவியினால் நிறைந்தது மாத்திரமல்லாமல்' அவர்கள் இன்றைய கிறிஸ்தவர்களைப்போல் அல்லாது, "தனக்குண்டானவைகளில் ஒன்றையாகிலும், தன்னுடையதென்று ஒருவனாகிலும் சொல்ல வில்லை" அதாவது, **தனக்கானதை நாடாத கிறிஸ்துவின் ஒருமனமான சிந்தை** அவர்களிடம் இருந்ததுதான்! (அப்.4:32).

இந்த வசனத்தை வைத்து, அவர்கள் தங்களுடைய உடைமைகள் அனைத்தையும் விற்றுவிட்டார்கள் என்று அர்த்தம் கொள்ளவும் கூடாது. அதற்கு மாறாக, தாங்கள் வைத்திருந்தவைகளை தாங்கள் மாத்திரமே பயன்படுத்த முடியும் என இல்லாமல்..... கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள எல்லா விசுவாசிகளும் பயன்படுத்திட வெளிப்படையாய் வைத்தார்கள்! ஆகவே 'தேவை என இருந்தவர்கள்' அவர்களில் ஒருவருமில்லை. ஏனெனில், அதிகமாய் வைத்திருந்தவர்கள், குறைச்சலில் இருந்தவர்களுக்கு உதவி செய்தார்கள்!

"அன்றிருந்த சூழ்நிலையில்" அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி 'சில ஜனங்கள்' சுய இலாபம் தேட நாடும், வாய்ப்பு இருந்ததையும் நாம் காண முடிகின்றது! இந்த சந்தர்ப்பத்தையே, **அனனியா சப்பீராள்** சாதகமாக்கியதை 5 - ம் அதிகாரத்தில் காண்கிறோம்!

இன்றும், இதுபோன்ற பொருளாதார ஆதாரத்தை வைத்தே, அனேக ஜனங்கள் இந்தியாவில் உள்ள நம் போன்ற 'தனக்கானதைத் தேடாத' சபைகளில் சேர்ந்து கொள்ள விரும்புகிறார்கள்.

நம் மத்தியில் உபசரிப்பும் உதாரத்துவமும் நிறைந்த மக்கள் இருப்பதை அவர்கள் கண்டதினிமித்தமே, நம்மோடு சேர்ந்து கொள்ள விரும்புகிறார்கள். நாம் துரிதமாக இதுபோன்ற ஜனங்களை 'களை எடுத்து அகற்ற' கவனம் கொள்ளவில்லையென்றால், வெகு சீக்கிரத்தில் இந்தியாவில் உள்ள பொருளாதார ரீதியில் குறைவானவான ஜனங்கள் நம்முடைய சபைகளோடு சேர்ந்து கொள்ள அதிகமாய் விரும்புவார்கள்! அவ்வாறு சம்பவிக்கும்போது, ஓர் ஆச்சரியப்படத்தக்க "சபை வளர்ச்சி போல்" மற்றவர்களுடைய கண்களுக்கு காட்சி அளிக்கும்! இந்நிலை ஏற்படும்போது, குணப்பட்டவர்கள் என்ற பெயரில், நீதியின் மேல்

*விருப்பம் கொண்டவர்கள் அல்ல..... பணத்தின் மீது விருப்பம் கொண்டவர்களே நம் மத்தியில் தங்கிவிடுவார்கள். ஆதி நாட்களில் 'சோறு வாஞ்சிக்கும் கிறிஸ்தவர்களே' மிஷனெரிமார்களுக்கு கிடைத்தார்கள்! இவர்களின் முழு மனதும் இலவசமாய் சாப்பிடுவதும் இலவசமாய் படிப்பதும் இலவசமான வைத்தியம் பெறுவதும்..... இன்னும் அவர்கள் முக்கிய நபர்களாய் இருந்தால், அமெரிக்காவிற்கு இலவசமாய் போய் வரவும் போன்ற மனதுடையவர்களே மிஷனெரிமார்களை சூழ்ந்து கொண்டார்கள்! இதுபோன்ற மனநிலைதான், இன்றும் கிறிஸ்தவ சபைகளில் உலாவி வருவதை காண்கிறோம்.*

இந்தியாவிலுள்ள அநேக கிறிஸ்தவ ஊழியர்களுக்கு 'கர்த்தருக்கு முழு நேரமாய் ஊழியம் செய்வது' சம்பாத்தியத்தின் அடிப்படையில் செய்கிறார்களே அன்றி, 'அழைப்பின் ஆதாரம்' அவர்களிடத்தில் இல்லை!

*இன்று திரளான ஜனங்கள், சபையில் சேர்ந்து கொண்டு தங்கள் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த பார்க்கிறார்கள்! அப்படி இல்லாமல், அவர்களது நீதியான வாழ்க்கையை கண்டு, தேவன் கனம் செய்து, பொருளாதார ஆசீர்வாதம் அவர்களுக்கு உண்டாகியிருந்தால் அது மிகவும் நல்லது! இதற்கு மாறாக, சபையில் சேர்ந்ததினிமித்தம், அவர்களுக்கு கிட்டிய பணக்காரர்களின் தொடர்பு மூலமாய் பொருளாதார ஐசுவரியம் பெற்றிருந்தால், ...... அதுபோன்றவர்கள், தங்கள் ஜீவியத்தில் தேவனுடைய சித்தத்தை முற்றிலுமாய் இழந்து விட்டார்கள் என்றே உறுதியாய் கூறலாம்! ஏனெனில், உத்தம கிறிஸ்தவம் 'பொருளாதார ஆதாயம்' தேடுவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு வழி அல்ல!*

உச்சிதமான ஓர் சபை, தியாகமும்! கொடுப்பதும்! நிறைந்த ஸ்தலமாய் இருக்க வேண்டும்!

*அது அல்லாமல், அந்த ஸ்தலம், இலாபமும் ஆதாயமும் தேடுகிற ஸ்தலமாய் ஒருபோதும் இருக்காது! ஓர் துக்கமான உண்மை யாதெனில், இந்தியாவிலுள்ள இன்றைய திரளான 'கிறிஸ்தவ ஊழியர்கள்' அவர்கள் உலக அலுவல்களில் வாங்கும் சம்பாத்தியத்தை விட 5 அல்லது 10 மடங்கு அதிகம் சம்பாதிக்கிறார்கள். இன்னுமாய், திரளான கிறிஸ்தவ ஊழியர்கள், ஒரு நாள் கூட ஓர் உலக அலுவலில் ஈடுபட்டதில்லை! உலக அலுவல்கள் யாதொன்றும் செய்யாத வர்களை, தன்னுடைய அப்போஸ்தலர்களாக, இயேசு ஒருவரையும் அழைத்ததில்லை! இன்று நம் இந்திய தேசத்தில் கிறிஸ்தவ ஊழியம், பெருத்த இலாபம் சம்பாதிக்கும் தொழிலாய் மாறிவிட்டது.*

இன்றுள்ள கிறிஸ்தவரல்லாதவர்கள் இவர்களைப் பார்த்து "பண ஆதாயத்திற்காக இந்த மனுஷன் ஒரு கிறிஸ்தவ ஊழியனாகி விட்டான்" என்றே கூறுகிறார்கள். அவர்கள் கூறியதில் தவறொன்றும் இல்லை! அவர்களின் வாயை எங்ஙனம் தடுத்து நிறுத்த முடியும்? இந்த கிறிஸ்தவ ஊழியர்கள், தாங்கள் கிறிஸ்தவ ஊழியங்களில் பெறுவதை விட 'உலக அலுவல்களில் இருந்திருந்தால்' அதிகம் பணம் சம்பாதித் திருக்க முடியும்! என காண்பித்திட முடியுமென்றால், குறைகூறும் கிறிஸ்தவரல்லாதவர்களின் வாயை அடைத்திருக்க முடியும்!

அப்போஸ்தலர்.4:32 -ம் வசனத்தின்படி "தனக்கானதைத் தேடாமல்" **எல்லோரும் தங்கள் ஆஸ்திகளை விற்று,** அப்போஸ்தலரிடம் ஒப்படைத்து, ஏழைகளின் தேவைகளுக்கு அவர்கள் பகிர்ந்து கொடுக்க ஒவ்வொருவரும் முன்வந்த வேளையில், **அனனியாவும் சப்பீராளும் வேறு விதமாய் சிந்தித்தார்கள்:** அவர்கள் எண்ணினார்கள் "தங்கள் பணத்தை தொடர்ந்து தங்களோடு வைத்துக்கொண்டு, அதே வேளையில் தங்களை ஆவிக்குரியவர்களாக எப்படி காண்பிக்கலாம்?" என சிந்தித்தார்கள். ஆகவேதான் அவர்கள் தங்கள் காணியாட்சியை விற்ற பணம் முழுவதையும் அப்போஸ்தலர்களிடம் கொண்டு வரவில்லை! அவர்களுடைய பாவம், தங்கள் முழு பணத்தையும் கொண்டு வந்து தரவில்லை என்பதல்ல! மகிழ்ச்சியோடு கொடுப்பதையே தேவன் விரும்புகிறார்..... ஆகவே, யாருடைய பணத்தையும் தேவன் விரும்பவில்லை! பேதுரு அனனியாவைப் பார்த்து கூறும்போது "அதை விற்கும் முன்னே அது உன்னுடையதாய் இருக்கவில்லையோ? அதை விற்றபின்பும், அதின் கிரயம் உன் வசத்தில் இருக்கவில்லையோ?..... அப்படியிருக்க, நீ தேவனிடத்தில் ஏன் பொய் சொன்னாய்?" எனக்கேட்டார் (அப்.5:4).

பேதுரு அவர்களுக்கு உணர்த்த விரும்பியதெல்லாம் "அனனியா சப்பீராளின் பாவம்" தங்களை முழு இருதயமாய் இருப்பதைப்போல் பாசாங்கு செய்த மாய்மாலமே ஆகும்!

ஆனால் அனனியாவோ யாதொன்றும் கூறவில்லை! சகலத்தையும் ஒப்படைத்த முழு இருதயம் கொண்ட ஜனங்களுக்குப் பின்பாக, அவர்களும் அதே வரிசையில் நின்றார்கள். இவ்வாறாக வாய் திறந்து பேசாமலே "ஒரு பொய்யை" சொல்லி விட்டார்கள். ஆனால் பேதுருவோ பகுத்தறியும் ஞானத்தை உடைய மனுஷராய் இருந்தபடியால்..... அனனியா சப்பீராள் ஆகிய இருவரின் நிலையும் வெளியரங்கமாக்கப்பட்டு, தங்கள் சொந்த மாய்மாலத்தில் மரித்து போனார்கள்!

இதேபோல, இன்று தேவன் ஏன் கிரியை செய்வதில்லை? அப்படிச் செய்தால், இன்றுள்ள சபைகளில் வெகு கொஞ்சமான ஜனங்களே உயிரோடு இருப்பார்கள்!

அன்று, அனனியா சப்பீராள் தூய்மையான வல்லமை நிறைந்த ஒரு சபையின் நடுவில் இருந்தபடியால், அவர்கள் மரித்துப்போனார்கள். அதற்கு மாறாக, மரித்த நிலை கொண்ட, கொரிந்திய சபை போன்ற மாம்சீகமான சபையில் அவர்கள் இருந்திருந்தால், அவர்கள் மூப்பர்களாய் கூட மாறி இருப்பார்கள்!

நீங்கள் ஒரு மாய்மாலக்காரனாகவும், பெருமை கொண்டவராகவும் இருந்தால், பூரணத்தை வாஞ்சித்து முன் செல்லும் ஒரு சபையில் நீங்கள் போய் சேர்ந்து கொள்வது **'வெகு அபாயம்'** என்பதை அறிந்து கொள்ளுங்கள். அப்படிச் சேர்ந்து கொண்டால், தேவன் உங்களை அடித்து, அவர்கள் நடுவிலிருந்து 'ஏதாகிலும் ஒரு வகையில்' உங்களை அகற்றி விடுவார்! ஆனால் துரதிருஷ்டவசமாய், இன்றைய நாட்களில், அதுபோன்ற தூய்மையும் வலிமையும் நிறைந்த சபைகள் நம் மத்தியில் அதிகமாய் காணப்படவில்லை! இதனிமித்தமாய், இன்றைய சபைகளில் இதுபோன்ற தரம் கெட்டவர்கள் இன்னமும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்! எனவே, நீங்கள் பெருமையும் மாய்மாலமும் உடையவர்களாய் இருந்துகொண்டே..... தொடர்ந்து உயிரோடு வாழ வேண்டுமென்றால் **'ஒரு செத்த சபையை'** தெரிந்து கொண்டு அங்கு செல்லுங்கள்! உத்தம சபைக்கு நேர்மையும், தெய்வ பயமுமே ஆதாரம் என்பதை அறியுங்கள்!

– சகரியா பூணன்

---

## 'சிலுவையின் பாதையில்' பொக்கிஷங்கள் கண்டேன்!

**எ**ன் சொந்த ஊரைச் சேர்ந்த ஒரு உறவினர், கத்தோலிக்க மடத்து 'சகோதரனாய்' இருந்தார். என்னை அவர் பார்க்க வந்தபோது, 'உங்களின் ஆவிக்குரிய பக்தியை' நான் பெரிதும் விரும்புகிறேன். நீங்கள் உங்கள் சொந்த ஊருக்கு வந்துவிட்டால், அதிகமான ஆவிக்குரிய காரியங்களை பேசிக்கொள்ளலாம் என அழைத்தார். இந்த சமயத்தில் என்னுடைய கணவரும் அந்த சகோதரனோடு சம்பாஷிப்பதை பெரிதும் விரும்பினார்.

ஆனால் எனக்கோ, கிறிஸ்தவன் என கூறிக்கொள்ளும் ஒருவன் ஒன்று தேவனை நேசிக்க வேண்டும்! அல்லது அவரை புறக்கணித்திருக்க வேண்டும்! (மத்.6:24) என இயேசு குறிப்பிட்டதையே நான் ஆதாரமாய் கொண்டு வாழ்ந்து வந்தேன். ஆகவே, எனக்குப் பிரியமான யாவரும் **தேவனை முழு இருதயமாய்**

**நேசிக்க வேண்டும்** என்ற மனநோக்கமே எனக்குள் உறைந்திருந்தது. ஆனால், இந்த 'பிரதர்' என்னை என் சொந்த வீட்டிற்கு வரும்படி அழைத்ததை 'தேவ சித்தத்திற்கு உட்பட்டு' கூறியதாக என்னால் காண முடியவில்லை. இருப்பினும், மீண்டும் அவர் என்னை வலியுறுத்தி அழைப்பு விடுத்த போது, அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, கிறிஸ்தவ ஜீவியத்தில் "ஆத்துமாவின் ஆழத்திற்குள் நடந்து செல்லும் ஓர் பாதை" உண்டென்பதை எடுத்துக் கூறினேன். இவ்வாறு நான் கூறியதைக் கேட்டு 'அந்த சகோதரனின் மன நோக்கம்' முற்றிலுமாய் மாறி, விடை பெற்றுச் சென்றார். ஆவியானவரின் நடத்துதல் இல்லாமல், நான் விரும்பியபடியோ அல்லது பிறருடைய விருப்பத்திற்கு இணங்கியோ செல்லும்பாதை 'ஜீவ பாதை' அல்ல என உணர்ந்தேன்!

இதுபோன்ற "எதைத் தெரிந்து கொள்வது?" என்ற இக்கட்டான சூழ்நிலையில், இடைவிடாமல் எனக்குள் செயல்பட்டுக் கொண்டிருந்த ஜெப ஆவியை என்னால் உணர முடிந்தது. என்னுள் உறைந்திருந்த இந்த ஜெப ஆவி 'என்னையும் அறியாமலே' செயல்பட்டதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன்! இதுபோன்ற ஆத்துமத்தின் நிலையில், என் சுய ஜீவியத்தின் உணர்வைவிட தேவ பிரசன்னத்தின் உணர்வே என்னை அதிகமாய் ஆட்கொண்டிருந்ததைக் கண்டேன். இவ்வாறு ஆட்கொண்ட அன்பின் பிரசன்னம் 'என் சொந்த விருப்பத்திற்கு இணங்கும் சுய சித்தத்தை' என்னைவிட்டு முற்றிலுமாய் அகற்றிவிட்டது. அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் சூழ்நிலையின் வறட்சியைவிட, தேவ பிரசன்னத்தை காணாமல் போகும் நேரமே எனக்கு அதிக வேதனையை தந்தது!

**இவ்வித அனுபவத்திற்குள் நடத்தும் 'நொறுங்குண்ட' சிலுவையின் பாதை 'திடீரென்று' மறையும் போது.... ஒருவேளை, நான் சிலுவைக்கு இணங்க மறுத்த சந்தர்ப்பங்கள் ஏதும் இருக்குமோ? என என்னை கரிசனையுடன் ஆராய்ந்து பார்த்தேன்.**

சிறிது காலம், தேவனே எனக்கென்று, சிலுவை பாதையில் இடைவெளி ஏற்படுத்தியிருந்தால் 'அதை மறுப்பதற்கு' நான் துணியவில்லை! சிலுவையின் பாதையில் "தேவசித்தம் மாத்திரமே நிறைவேற்றிட" அப்படி ஒரு சினேகத்தை தேவன்மீது வலிமையாய் வைத்திருந்தேன். இந்த மேன்மையான என்னுள் வாசம் செய்த தெய்வ அன்பே, தேவனுடைய எந்த வழியையும் 'ஓர் கட்டளையாக ஏற்று' என்னை நடக்கச் செய்தது. அவர் நடத்தும் பாதையில், நான் அவரையே முற்றிலும் சார்ந்து கொண்டபடியால் எவ்வித பயங்கரமோ, இடிபோன்ற நிகழ்ச்சிகளோ, அசுத்த ஆவிகளோ,

அல்லது 'மரணமே' என்னை நேருக்கு நேர் சந்தித்த சம்பவங்களோ..... ஆகிய யாதொன்றும், **என் உள்ளத்திற்குள் அச்சத்தை** கொண்டுவர முடியவில்லை!

வீட்டில் எனக்கு சம்பவித்த நிகழ்வுகள், என்னுடைய ஆவிக்குரிய நிலைக்கு நிரூபணமாகவே இருந்தது! என்னுடைய வீட்டில், இப்போது வரை.... எதுவெல்லாம் தீமையாய் நடந்ததோ, எதுவெல்லாம் கெட்டுப்போனதோ, எதுவெல்லாம் உடைந்து போனதோ...... ஆகிய ஒவ்வொன்றிற்கும் என்னையே சுற்றிச் சுற்றி வந்து குற்றம் சாட்டினார்கள். என் தூய மனசாட்சியை அறிவிக்கும்படி "நீங்கள் கூறுவதுபோல் நான் செய்யவில்லை!" என உண்மையை எடுத்துக் கூறினேன். ஆனால் சூழ்ந்திருந்த ஜனங்களோ "நீ பொய் சொல்கிறாய்" என பிடிவாதமாய் கூறினார்கள். இப்போது நான் 'ஒரு பதிலும் கூறாத' நிலையில் அமர்ந்துவிட்டேன். இதனால் ஏற்பட்ட விளைவு என்னவென்றால், என் வீட்டிற்கு வந்த நண்பர்கள் உறவினர்கள் அனைவரிடமும் பல்வேறு கதைகளை எனக்கு விரோதமாய் திரித்து தாராளமாய் பேசினார்கள். இவ்வாறு, என்னைக் குறித்த தீய கதைகளை கேட்டு வந்த நபர்களை நான் தனியாய் சந்திக்க நேர்ந்தபோது "நீங்கள் கேட்ட அனைத்தும் பொய்யானது" என நான் சிறிதுகூட விளக்குவதற்கு முயற்சிக்கவில்லை. எனக்கு நண்பர்களாய் இருந்த சிலர்கூட "என்னைக் குறித்த தப்பான அபிப்பிராயங்களை உருவாக்கும் கதைகளை, அவர்கள் ரசித்து கேட்டு மகிழ்ந்தார்கள்" என நான் கேள்விப்பட்டு வருந்தினேன்.

இவ்வித, பொய்யாய் தீது பேசப்பட்ட சமயங்களில், என்னுடைய அனைத்து உணர்வுகளையும் "கள்ளமறியாத அல்லது களங்கமற்ற வீட்டிற்குள்" என்னை வைத்துக்கொள்ள என் இருதயம் பழகிக் கொண்டது!

யாரோ சிலர், என்னைக் குறித்து மேன்மையாகப் பேசினாலோ அல்லது தீமையாகப் பேசினாலோ "கள்ளமறியா வீடே" என் உறைவிடமானது! அந்த இல்லத்தில், முழு உலகத்தின் சகல அபிப்பிராயங்களும், என்னை மற்றவர்கள் அளந்து பார்த்த அளவுகளும் தூர விலகிப் போனது! அந்த கள்ளமறியா, கபடற்ற வீட்டில் "**தேவனுடைய சினேகம் ஒன்று மாத்திரமே**" என்னோடு வாசமாயிருந்தது!

இந்நிலையில், சில தடுமாற்றமும் எனக்கு ஏற்பட்டது. குற்றம் சாட்டுதலின் கொடிய வெப்பத்தில், அதை தாங்க முடியாமல், சில சமயங்களில் 'நான் நிரபராதி' என என்னை நியாயப்படுத்த முயற்சித்திருக்கிறேன். ஆனால், அதுபோன்ற சந்தர்ப்பங்கள் எனக்கு

தோல்வியாகவே முடிந்தது மாத்திரமல்லாமல், எனக்கு உள்ளும் வெளியையும் தேவசித்தம் இல்லாத 'புதிய துன்பங்களை' நான் அனுபவிக்க வேண்டியதான நிலை ஏற்பட்டது.

நான் உரத்த சத்தமாய் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம்: நான் சந்தித்த சிலுவைகளுக்கெல்லாம் மிகப் பெரிய சிலுவையாக என் கண்களுக்கு முன்பாக தோன்றும் 'பாரமான' சிலுவை, ஒன்றே ஒன்றுதான்..... அதை நான் சொல்கிறேன்:

**"எனக்கு யாதொரு சிலுவையும் அருளப்படாத நிலையே, என்னை அச்சுறுத்தும் மிகப் பெரிய சிலுவை!"**

ஒரு கொஞ்ச காலத்திற்கு, என்னை விட்டு சிலுவை அகன்று விட்டால், நான் அடைந்திடும் உணர்வெல்லாம் "ஆண்டவரே, நீர் எனக்குத் தந்த சிலுவையை நான் தவறாய் கையாண்டேனோ?" என்ற கூக்குரலையே தேவனுக்கு முன்பாக வைத்தேன். சிலுவை எனக்கு கொண்டு வந்த பரத்தின் பொக்கிஷங்களின் மதிப்பை.... சிலுவை என்னைவிட்டு ஒளிந்து கொண்ட சமயத்தில்தான், மிக மிக அதிகமாய் உணர்ந்தேன்!

– மேடம் குயான்

## உணர்வடைந்து மாற்றிக்கொண்டவர்களே, பரிசுத்தவான்கள்!

**உ**ங்கள் சிந்தை எப்படியிருக்கிறது என்பதை வைத்துதான், உங்கள் இருதயத்தின் "தட்ப-வெப்ப நிலை" கணிக்கப்படுகிறது! உங்கள் சிந்தை எப்படியோ, அதை வைத்தே தேவன் உங்களை கணக்கிட்டு அறிந்து கொள்ளுகிறார்!! ஆகவே உங்கள் சிந்தை சமாதான முள்ளதாயும், பட்சமுள்ளதாயும், இரக்கமுள்ளதாயும், கனிவு கொண்டதாயும், சிநேகம் நிறைந்ததாயும், தேவனைப் பற்றியதாயும், அவரது குமாரனைப் பற்றியதாயும்...... நிறைந்திருப்பதாக! பரிசுத்த ஆவியானவரின் இணக்கம் உங்களுக்கு எவ்வளவு உள்ளதோ, அதைக்கொண்டு உங்கள் "**சிந்தை பூமியை**" **காத்திடுங்கள்!** அந்த பூமியில் பாவ அரக்கர்கள் உலாவிட, ஒருபோதும் அனுமதிக்காதீர்கள்!

கிறிஸ்தவ வாழ்வில் இரண்டு ரகமான ஜீவியம் மாத்திரமே உண்டு! 1.கட்டாந்தரை ஜீவியம்! 2. உழப்பட்ட நிலத்தின் ஜீவியம்! உழுது பட்டு, நொறுங்கிய ஜீவியத்திலிருந்தே அற்புதங்கள் தோன்றிடும்!! சகோதரன் பவுலைப் பாருங்கள், அவருக்கு உண்டாயிருந்த "அந்த முள்" அவரை ஒப்பற்ற தேவ மனுஷனாய் மாற்றிவிட்டதே!! இவ்வாறு, வாழ்வின் பாதையில், ஒரு சிலர் மாத்திரமே தேவனை கண்டு கொள்ளுகிறார்கள்........

*பெரும்பாலோர், தேவனை காணமுடியவில்லையே? அதற்கு என்ன காரணம் தெரியுமா? தன்னுடைய சொந்த வீட்டில் தேவன் ஒருபோதும் பாரபட்சமாய் நடப்பதே இல்லை...... மாறாக, வாழ்வின்* **சூழ்நிலைகளை சந்தித்திடும் நபரைப் பொறுத்தே** *எல்லாம் இருக்கிறது என்பதை அறிந்திடுவோமாக!!*

*இந்நிலையில், நம்மை சோதித்து அறிந்திட வேண்டியது மிக அவசியமாகும். ஏனெனில், சிறந்த பரிசுத்தவான்களாய் திகழ்ந்த யாவரிடமும் காணப்பட்ட ஓர் அதிசயமான குணாதிசயத்தை நாம் யாவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றே நான் அதிக பாரம் கொண்டிருக்கிறேன்: அந்த பரிசுத்தவான்களிடம் காணப்பட்ட* **“ஆவிக்குரிய உணர்வுள்ள விழிப்பான ஜீவியமே”** *நமக்கும் காணப்பட வேண்டும்.*

இவர்கள் எப்போதெல்லாம், தங்கள் உள் உணர்வில் தூண்டுதல் பெற்றார்களோ, அதற்கிணங்க உடனே கிரியையும் செய்தார்கள். ஆவியானவர் தங்களை உணர்த்தும் ஜீவியத்தை, என்றோ சில நாள் அல்ல...... தங்கள் ஜீவ காலமெல்லாம் அதைப் பெற்று வாழ்ந்தார்கள்!

*இந்த “ஆவிக்குரிய உணர்வை” ஒருவன் தன்னில் அப்பியாசித்து தொடர்ந்து அதைப் பெருக்கிக் கொண்டே செல்ல முடியும்! அல்லது, அந்த ‘உணர்வுகளை’ அசட்டை செய்து, அவைகளை அழித்துப் போடவும் முடியும்!!*

*இத்தகைய ‘உணர்வானது’ பரத்திலிருந்து இறங்கி, ஒருவனை சுற்றிவளைத்து ஆட்கொண்டுவிடும் என எண்ணிவிடாதீர்கள். அது, ஒவ்வொருவனுக்கும் தேவன் ‘ஈவாய்’ தருவதே ஆகும். ஒன்று, அதை அவன் பெற்றுக்கொள்ளலாம், அல்லது அதை உதாசினப்படுத்தி விடலாம்!! விழிப்புடன் வாழவேண்டியதோ, உங்களைச் சார்ந்ததேயாகும்!*

*– A.W. டோசர்*

---

## சுகமும், சுக வாழ்வும் தந்த ‘பரிசுத்த ஜீவியம்!’

***டொ****ராண்டோ பட்டணத்தில் நடைபெற்ற கூட்டங்களில் விக்கிள்ஸ்வொர்த் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்தார். விக்கிள்ஸ்வொர்த் தங்கியிருந்த அறைக்கு, ஓர் வளர்த்தியான நபர் அதிகாலையில் வந்தார். மிகுந்த கண்ணீரோடு பேசிய அந்த நபர் “ஐயா இந்த பட்டணத்தில் தலைசிறந்த வியாபாரியான நான் ‘திடீரென்று’ 3- வருடங்களுக்கு முன்பாக நரம்பு தளர்ச்சி அடைந்து நிலை குலைந்து போனேன். அன்று தொடங்கி இன்று வரை, ஒரு இரவு கூட என்னால்*

*நிம்மதியாய் தூங்க முடியவில்லை. அதனிமித்தம், என் பிரபல்யமான வியாபாரம் வீழ்ச்சி அடைந்தது! என் ஆஸ்தி, உடைமைகள் அனைத்தையும் என் வியாபார நஷ்டத்தில் இழந்தேன். நான் சுகமாக தயவு செய்து பிராத்தனை செய்யுங்கள்" என கண்ணீருடன் கூறினார்.*

*அந்த நபரின் தோள் பட்டைகளில் விக்கிள்ஸ்வொர்த் கைகளை வைத்து, நேருக்கு நேராய் அவரின் கண்களை உற்று நோக்கினார்! "நீ வீட்டிற்குச் சென்று, இயேசுவின் நாமத்தில் நித்திரை செய்" என கூறினார். அந்த நபரோ பேசுவது தெரியாது திகைத்தார். மீண்டும் விக்கிள்ஸ்வொர்த் அவரிடம் சென்று "நான் சொன்னபடி, உடனே வீட்டிற்கு போங்கள்" என கட்டளையிட்டு, அவரை வாசல் வரை கொண்டு வந்து, வெளியில் நடக்க வைத்து, பின்பு வந்தனம் செய்து கதவை பூட்டிக் கொண்டார்.*

*அடுத்த நாள் அதிகாலையில், அந்த நபர் தொலைபேசியில் விக்கிள்ஸ்வொர்த்தை அழைத்து "நீங்கள் சொன்னபடியே, நேற்று இரவு முழுவதும் நான் நிம்மதியாக தூங்கினேன்!* **நல்ல சுகமும் பெற்றேன்!**" *எனக்கூறி 'உங்களை நேரில் பார்க்க வருகிறேன்' என தொலைபேசியை வைத்துவிட்டார். விக்கிள்ஸ்வொர்த் வீட்டிற்குள் நுழைந்த அந்த சகோதரன், விக்கிள்ஸ்வொர்த் கரங்களை நன்றியுடன் பற்றிக் கொண்டு "ஐயா நான் இன்று ஓர் புதிய மனிதன்! கிறிஸ்துவுக்குள் ஓர் புதிய வாழ்க்கைக்குள் பிரவேசித்திருக்கிறேன். நல்ல சுகத்தையும் பெற்றுவிட்டேன்! நான் வியாபாரத்தில் கண்ட பெரும் நஷ்டம் ஒன்றுதான் எனது மனவருத்தம். அதற்கும் ஓர் விடை உண்டா?" எனக்கூறிய என்னிடம்* **"எல்லாவற்றிற்கும் விடை உண்டு,** *இன்று இரவு நடக்கும் கூட்டத்திற்கு வாருங்கள்!" என விக்கிள்ஸ்வொர்த் அழைத்தார்.*

*அன்று இரவு, தேவனுடைய* **பரிசுத்தத்தைக் குறித்தும், பாவத்தின் அருவருப்பை குறித்தும்** *விக்கிள்ஸ்வொர்த் அனல் கொண்டு பேசினார். அந்த கூட்டத்தில் அமர்ந்திருந்து, இந்த செய்திகளைக் கேட்ட 'நரம்பு தளர்ச்சி சுகம் பெற்ற அந்த சகோதரன்' கண்ணீர் பெருக செய்திகளைக் கேட்டு உணர்வடைந்தார். உணர்வடைந்தவர்கள் தங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுக்க அழைக்கப்பட்டபோது, அந்த சகோதரன் எழுந்து சென்று முகங்குப்புற விழுந்து, தன்னை கண்ணீரோடு ஒப்புக் கொடுத்தார். அன்றிலிருந்து அந்த சகோதரனுடைய வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டது! பரிசுத்தத்தை நாடி வளர்ந்த அந்த சகோதரனின் வியாபாரம் மீண்டும் துளிர்விட்டு, பழைய பிரபல்ய வியாபார எல்லையை தொட்டு ஆசீர்வதித்து விட்டது!*

ஒரு நாள் விக்கிள்ஸ்வொர்த் வீட்டிற்கு வந்த ஒரு காரில், இந்த சகோதரன் ஓர் மதிப்பு மிக்க கனவானாய் விக்கிள்ஸ்வொர்த்தை சந்தித்தார்.

**உள்ளம் எல்லாம் மகிழ்ந்து மகிழ்ச்சியுடன் நின்ற அந்த கனவான் "ஐயா என்னைத் தெரிகிறதா?" எனக் கேட்டார். அதற்கு விக்கிஸ்வொர்த் "அன்று நரம்பு தளர்ச்சி சுகமான மனிதன்.... இன்று பரிசுத்த வாழ்க்கைக்கு ஒப்புகொடுத்து வாழும் மனிதன், சரிதானே?" என கேட்டார்.**

அதற்கு அந்த கனவான் "நீங்கள் சொன்னபடியே அந்த மனிதன்தான் நான்! ஒவ்வொரு நாளும் நான் சுகமான நித்திரை செய்வதைவிட மேலாய், இயேசுவின் பரிசுத்த வாழ்க்கையை பெற்றுக்கொண்டேன்! ஐயா, அந்த பரிசுத்த வாழ்க்கை.... என் வியாபாரத்தின் பெரு நஷ்டத்தையும் மீட்டுத் தந்த அற்புதத்தையும் கண்டேன்! நீங்கள் சொன்னபடியே கிறிஸ்துவுக்குள் வாழும் மெய்யான பரிசுத்த வாழ்க்கையே, என் இழந்த வாழ்க்கையையும் மீட்டுக் கொடுத்தது! உங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி" என உள்ளம் பூரித்துக் கூறினார்! ஆம், ஒரு மனிதனின் சரீரம் சுகமடைவது மாத்திரமே, சிறந்த ஊழியம் அல்ல..... அவனது ஆத்தும சுகமே, மகிழ்ச்சி தரும் ஊழியம் என்பதை விக்கிள்ஸ்வொர்த் வலியுறுத்தினார்!

– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

---

## 'அவரே' நமது மாசில்லாத விசுவாசம்!

இன்றைய விஞ்ஞான உலகம் "ஒளியின் வரம்பை' உடைத்து முன்னேறிவிட்டது! இந்த விஞ்ஞானம் இவ்வளவு பெருகியும், உலகம் இன்னமும் பாவத்தில்தான் வளர்ந்து வருகிறது. இன்றைய மானிட வர்க்கமோ "பாவத்தின் தடையை" உடைத்து, சொல்லில்லடங்கா தீமையான பாவத்திற்குள் சென்றுவிட்டது! ஓ கர்த்தாவே, நாங்களோ விசுவாசத்தின் மீது வைத்த கண்ணை மாற்றாமல் 'சந்தேக தடைகளை' உடைத்து வளர அனுகிரகம் செய்வீராக! என்பதே நமது ஜெபம்!!

தேவன் மீதும், தேவனுடைய வார்த்தையின் மீதும் வைத்திடும் சந்தேகம், விசுவாசத்தை அழிக்கிறது! ஆகிலும் உள்ளத்தில் விசுவாசம் பிறந்துவிட்டால், அந்த விசுவாசம் 'சந்தேகங்களை' அழித்துவிடும்! ஆசீர்வதிக்கப்பட்ட வேத புத்தகம் "நீங்கள் வேத வாக்கியங்களை நன்றாய் வியாக்கியானம் செய்துவிட்டால், அவ்வாறு வியாக்கியானம் செய்கிறவனால் எல்லாம் கூடும்" என ஒருக்காலும் கூறியதில்லை! தேவனையும் தேவனுக்குரியவைகளையும் நம் காலத்தில் முழுவதுமாய் வியாக்கியானம் செய்வது சாத்தியமல்ல! நாம் சென்றடையும்

*நித்தியத்தில்கூட, தேவன் தன்னையும், தனக்குரிய வழிகளையும் நமக்கு வியாக்கியானம் செய்திட முயற்சிக்கமாட்டார். தேவன் எப்படியோ அதுபோலவே அவர் வைத்த வேதமும் அழியாததொன்றே ஆகும்! ஆகவே, பிழையற்ற இந்த வேதம் "நீ விசுவாசிக்க கூடுமானால் ஆகும். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" என்றே, "எல்லாம் கூடும்" என்ற வார்த்தைகளின் சக்தியைப் பெற்றவன் மாத்திரமே, விசுவாசத்தைப் பெற்றவன் என கெம்பீரிக்கிறது!*

*இன்றைய சமூகத்தில், வேலைக்கு தகுதியுள்ள ஒருவன், அந்த தகுதி உதாசினப்படும்போது, மனம் நொந்து "இந்த காலத்தில், பாடங்களை நான் அறிந்திருக்கிறேன் என்பது பெரிய காரியமாய் தோன்றவில்லை!* **வேலை விஷயமாய் யாரெல்லாம் எனக்குத் தெரியும்?"** *என்பதே பெரிய காரியமாய் தோன்றுகிறது என மனம் நொந்து கூறுகிறான். இன்றைய சமூகத்தில் இவ்வித அவலம் பரவி வருவதை நான் பெரிதாய் பேச விரும்பவில்லை. ஆனால் இந்த உணர்வை கொண்டு நான் சொல்ல விரும்புவதெல்லாம்,*

> ஆவிக்குரிய உலகில் "நீங்கள் எவ்வளவுதான் தேவனைப் பற்றிய புத்தகங்களை உங்கள் நூலகத்தில் அடுக்கி இருந்தாலும், தேவனை அறியவில்லையென்றால் அதில் பிரயோஜனம் ஒன்றுமில்லை!"

*இதை பவுல் கூறும்போது "நான் ஒன்றுமில்லாதவனாய் இருந்தும் எல்லாம் உடையவனாய் இருக்கிறேன்!" என்றே கூறினார். ஆ, எத்தனை ஆசீர்வதிக்கப்பட்ட ஏழ்மை! ஆகிலும், இந்த பவுலோ ஆவிக்குரிய ஆசீர்வாதத்தில் மகா ஐசுவரியம் உள்ளவராய் இருந்தார். பவுல் தீவிரமாய் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தைக் கட்டியதும், கர்த்தருடைய வார்த்தைகளை வேத வாக்கியங்களாய் எழுதியதும்.... அவரை பெருமை அடையச் செய்து நிதானமிழந்த குழிக்குள் தள்ள முடியவில்லை! அதற்கு மாறாக,* **தேவனை அறிகின்ற அறிவுக்கே** *சொல்லொண்ணா தாகத்தை தன் ஜீவிய பயணத்தின் முடிவு வரை வைத்திருந்தார். "இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கு, அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாகிலும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பதற்கு தகுதியாகும்படிக்கு ...." என* **'கர்த்தரை அறிகிற அறிவுக்கே'** *தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்து வாழ்ந்தார் (பிலிப்பியர்.3:10). ஆ, இதுவன்றோ நம் ஜீவியத்தை புரட்சிகரமாக்கும்!*

*'அவரின்றி' நமக்கு யாதொன்றும் பிரயோஜனமில்லை! இதுவே, தேவன்மீது கொண்ட மாசில்லாத விசுவாசம்!*

*– லியோனார்டு ரேவன்ஹில்*

---

## 'கிறிஸ்து இல்லாத' கிறிஸ்தவம் ஒழியட்டும்!

*ஒருகாலத்தில், சிறந்த சுவிசேஷ நோக்கத்தோடு ஆரம்பிக்கப் பட்ட கிறிஸ்தவ சங்கங்களை நாம் மறக்கலாகாது. கிறிஸ்தவ வாலிபர் சங்கம் (Y.M.C.A); கிறிஸ்தவ வாலிபப் பெண்கள் சங்கம் (Y.W.C.A); கிறிஸ்தவ மாணாக்கர் சங்கம் (S.C.M); கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கம் (C.E.S) என பல சங்கங்களை அறிவோம். மகா சிறந்த நோக்கத்துடனும் பாரத்துடனும் இவைகள் ஆரம்பிக்கப்பட்டன. சிறியவர்களும் பெரியவர்களும் 'இரட்சிப்பின் மாறுதலடைந்து'* **கிறிஸ்துவின் சாட்சிகளாக தியாகமுடன் உழைத்து** *ஊழியம் செய்ய வேண்டுமென்பதே அந்தச் சிறந்த நோக்கம்! அக்காலத்தில், ஜெபதபங்களும், வேத ஆராய்ச்சிகளும், கிறிஸ்துவைப்பற்றிய போதனைகளும் அப்படியொரு பக்தியாய் நடந்தேறின! இன்று அச்சங்கங்களின் நிலைமை என்ன? சபைகள் எப்படிப் பரிதாபமான நிலைமைக்கு தேய்ந்து வந்துவிட்டதோ, அதேபோல சாத்தானின் தீய வல்லமைகள் இச்சங்கங்களையும் ஆண்டுகொண்டன! இப்பிரபஞ்சத்துக்கு* **ஒத்த வேஷம் தரிக்க கொஞ்சம் இடம் கொடுத்து,** *இப்போது "எம்மதமும் சம்மதம்" என்ற சமரச நிலைமைக்கு வந்திருப்பது, ஓர் கொடுமை!*

*இந்த கிறிஸ்தவ சங்கங்களுக்கு தியாகமுடன் உதவிபுரிந்த பரோபகாரிகள் சுய தேசம் போய்விட்டபடியால், சங்கங்களைக் காப்பாற்ற வேறு வழிகளைத் தேடும் சிரமம் ஏற்பட்டது. இதனால் சாப்பாட்டு விடுதிகளும், சப்பாத்துக் கடைகளும், ஜவுளி கடைகளும் சங்க ஸ்தாபனகளைச் சூழ்ந்து பெருகின. வருஷக் கடைசியில் 'கார்னிவல்' என்னும் பேரால், நடனப் பெண்களைக் கொண்டுவந்து நாட்டியங்கள் ஆடவைத்தும், சினிமா நடிகர்களை அழைத்து அபிநயக் கூத்துகளைக் காண்பித்தும், கிறிஸ்தவ சங்க ஊழிய வேலைக்காக பணம் சேகரிப்பது எவ்வளவு துயரமான விஷயம்!*

**ஓர் காலத்தில் இப்படிப்பட்ட காரியங்களை நினைக்கவும் முடியுமா? ஓர் சிறிய தவறானாலும் சபையின் கண்டிப்பு பலமாயிருக்குமே! 'உலக வல்லமை' சபைகளை ஆண்டுகொண்டபடியால், சபையாரும் உணர்ச்சியற்று போனார்கள்!**

*"என்னைப் பணிந்துகொள்ளும், எல்லாம் உமக்குத் தருவேன்" (மத்.4:9) என்று நமதாண்டவரைச் சோதித்த சாத்தான், சபைகளையும் சங்கங்களையும் காலாவட்டத்தில் தன் கைவசப்படுத்திக்கொண்டான்!*

இந்த கொடுமை, கிறிஸ்தவ சபைகளுக்கும், ஊழிய சங்கங்களுக்கும் ஏற்படுவது நியாயம்தானா? தகாத வழியில் பணம் சம்பாதிப்பதை விட, ஊழிய பணிகளை மூடிவிடுவது நல்லது!

"கிறிஸ்து இல்லாத கிறிஸ்துமார்க்கம்" இருக்க முடியுமா? என்று ஒருவர் என்னைக் கேட்டார். சரியான கேள்விதான். அதற்கு, இருக்க முடியாதென்றே சொன்னேன்! இது "அநீதியுள்ள நியாயாதிபதி" (லூக்கா.16:12) என்று ஆண்டவர் சொன்னதைப்போலிருக்கிறது. நீதியுள்ளவனே நியாயாதிபதி. 'நீதியற்றவன் நியாயாதிபதியல்ல' என்றாலும் பேச்சுக்கு அப்படிச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. நல்லதம்பி என்பது ஒருவன் பேர்...... அவனோ கெட்ட தம்பியாயிருக்கிறான்! அப்படியிருந்தாலும், நல்லதம்பி என்றே அவனைக் கூப்பிடுகிறோம். கிறிஸ்தற்றவன் நிச்சயமாய் கிறிஸ்தவனல்ல! கிறிஸ்தற்ற மார்க்கம் அல்லது சபை, கிறிஸ்து மார்க்கமுமல்ல, கிறிஸ்தவ சபையும் அல்ல! அப்போஸ்தலர்கள் உலகமெங்கும் சென்று கிறிஸ்துவைப் பிரசங்கித்தார்கள்! விசுவாசித்த வர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டார்கள்!

பவுலுடைய பிரசங்கப்பொருள் கிறிஸ்து! "நாங்களோ கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்" என்றார்! கிறிஸ்து மார்க்கத்துக்கு 'கிறிஸ்துவே' ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். சபைகளில் மனுஷர் ஏற்படுத்தின காரியங்களை 'சத்தியம் என்ற பெயரில்' நாம் முக்கியப்படுத்தி கிறிஸ்துவை இழந்தோம். "பரவாயில்லை, அந்த வல்லமையான பிரசங்கியே சொல்லிவிட்டார்! இனி நாம் எதைக்குறித்தும் கவலைப்படாமல், செய்ய வேண்டிய நம் காரியத்தை தைரியமாய் நிறைவேற்றுவோம்!" என்றார்கள். எங்கே அவருக்கு இடமில்லையோ அங்கே அவரது மகிமைக்கு இடமில்லை!

தங்கள் பாவத்தால் கர்த்தரின் சமூகத்தை இழந்த இஸ்ரவேலர், கர்த்தருடைய பெட்டியால் தங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்று நினைத்து, மகா ஆரவாரத்தோடு அதைக் கொண்டுவந்து, பெலிஸ்தரோடே யுத்தம் பண்ணினார்கள். பெட்டியும் பிடிபட்டது; பெரிய அழிவும் உண்டானது! **கர்த்தரற்ற மனுஷருக்கு கர்த்தருடைய பெட்டியால் பிரயோஜனமென்ன?** கிறிஸ்தற்ற மனுஷருக்கு கிறிஸ்து மார்க்கத்தால் பிரயோஜனமென்ன? 'செத்த பிணத்தை' பூச்சூட்டி மகிழும் மாந்தர் உண்டோ? அதுபோன்ற நிலைக்கு இன்றைய கிறிஸ்தவம் மாறிவிட கூடாதே! என தேவ வைராக்கியம் கொண்ட மாந்தருக்கு பஞ்சம் ஏற்பட்டுவிட்டதோ? என்பதே, இன்று தேவனுடைய மனபாரம்!

– பரமானந்தம் ஐயர்

## ‘அவரைப்போல்’ நானும் அன்பின் நதியாகட்டும்!

**தே**வனால் பிறந்த எவனும் பாவம் செய்யான்! ஆகிலும் ‘தவறி விழுவது’ நம் எல்லோருக்குமே சம்பவிக்கும். தவறி விழுந்தவன், மனம் திரும்பி முன்னேறிச் செல்வது விசுவாச தீரம்! இருப்பினும், “நான் மீண்டும் வீழ்ந்து விடுவேனோ?” என்ற அச்சமே அனேகரை வாட்டி வதைக்கிறது. அவ்வித நேரத்தில், ஏற்கெனவே நம் உள்ளத்தை தொட்ட வேத வாக்கியத்தை திறந்து வைத்து, கருத்தூன்றி, திரும்பத் திரும்ப வாசியுங்கள். அது நமக்கு, புதிய ஜீவனைத் தரும்! வேத வசனம் உங்களுக்கு இப்போது தந்த உதவிக்கு ஒப்பாக, இந்த உலகில் வேறு எதுவும் இணையில்லை! “நாம் எல்லோரும் கிருபையின் மேல் கிருபை பெற்றோம்” என்ற வசனம் அதிக உற்சாகமானது (யோவான்.1:16). இதை வசனத்தை “கிருபைக்கு பதிலாக கிருபை பெற்றோம்” என வாசிப்பதும் சரியான விளக்கமேயாகும். நாம் திரும்பத் திரும்ப ஓயாமல் பெற்றிடும் கிருபை! என்பதே அதற்கு விளக்கமாகும்.

“**கிருபையின் மேல் கிருபை**” என்ற தெய்வ வாக்கியம், ஓர் ‘நதியையே’ நமக்கு காட்டுகிறது. நீங்கள் ஒரு ஆற்றங்கரையில் நின்று கொண்டு அதில் தண்ணீர் பாய்ந்து ஓடுவதை கவனித்துப் பாருங்கள்! ஒரு நிமிடம் கவனித்துப் பார்த்து, அடுத்த நிமிடம் இப்போது தொடங்குகிறது! இப்போதும் அதே ஆறுதான் ஓடுகிறதோ? ஆம், அதே ஆறுதான் ஓடுகிறது! ஆனால், ஒரு நிமிடத்திற்கு முன்னால் இருந்த அதே தண்ணீர்தான் அங்கு இருக்கிறதா? இல்லை! சில விநாடிகளுக்கு முன் நம் கண்களுக்கு முன்பாக கடந்துபோன தண்ணீர் இருந்த இடத்தை ‘அதே இடத்தில்’ வேறு தண்ணீர் தடாகம் நிரப்பிவிட்டது. பழைய தண்ணீர் போன இடத்தை புதிய தண்ணீர் நிறைத்துவிட்டது! இவ்வாறாக நாள் கணக்கில், மாத கணக்கில், வருட கணக்கில், அந்த ஆறு யுகயுகமாய் ஓடிக்கொண்டே இருக்கிறது. **இந்த பாக்கியம் ஓடுகின்ற நதிக்கு மாத்திரமே உண்டு! தேங்கி கட்டி நிற்கும் குட்டை – குளத்திற்கு அல்ல. அது ஜீவ தண்ணீர் அல்ல .... தண்ணீர் இருந்த இடத்தில் மீண்டும் தண்ணீர் ஓய்வின்றி பாய்கிறதே அதுவே ஜீவ தண்ணீர்!**

கிறிஸ்துவின் கிருபையை பெற்ற நம் இருதயத்தில், இன்னமும் தேவ கிருபை சுரந்து பாய்கின்றதே! தெய்வ அன்பு நம் நெஞ்சில் உதித்த இடத்தில், அதே தெய்வ அன்பு இன்னமும் தாரை தாரையாய் பாய்கின்றதே! இது அந்த கிருபை நாதரைப் பற்றிய சத்தியம். **நாம் மனம் துவளும்** போதெல்லாம், இந்த சத்தியம் உங்கள் உள்ளத்தை குளிரப்பண்ணும்!

உள்ளம் குளிர்ந்த நீங்கள், இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? அதே கிருபையை! அதே அன்பை! உங்கள் வீட்டாருக்கும் உங்களை சுற்றியுள்ள மக்களுக்கும்.... குறிப்பாக அன்பற்ற மக்களுக்கும், நீங்கள் 'தாரை தாரையாய்' தொடர்ந்து தந்துகொண்டேயிருந்தால்.... மகா பிரபுவின் நதியோடு, அந்த அன்பின் நதியோடு நீங்களும் இணைந்து விட்டீர்கள் என்பதே மாறாத நிரூபணமாகும்!

– ஏமி கார்மைக்கேல்

---

## குற்றம் சாட்டுகிறீர்களோ? அதில் அபாயம் உண்டு!

**பி**றரை குற்றம் சாட்டுகிற பாவத்தை, பெருவீழ்ச்சியென்றும், அபாயம் நிறைந்தது என்றும் அனேகர் உணர்வதில்லை! அன்று ஆதாமும் ஏவாளும் ஒருவரை மற்றொருவர் குற்றம் சாட்டியதே முதல் பாவம் என கூறலாம். இன்றும், பிறரை குற்றம் சாட்டுகிறவர்கள்.... ஆதாம் ஏவாளைப்போல தங்களை நியாயப்படுத்துகிறார்கள்! குற்றம் சாட்டுகிறவர்கள் 'உண்மையைதான்' குற்றமாய் வைக்கிறார்கள். ஆகிலும், **அவர்களுடைய ஆவியோ முற்றிலும் கறைப்பட்ட ஆவி!**

ஒருவரையொருவர் குற்றம் சாட்டிய ஆதாமும் ஏவாளும், 'குற்றம் சாட்டிய' தங்கள் பாவத்திற்காக மனந்திரும்பாதபடியால்.... அந்த பாவம், அவர்களின் பிள்ளை காயீனுக்குள்ளும் சென்றது!

காயீனைப் பார்த்து "உன் சகோதரன் ஆபேல் எங்கே?" என தேவன் கேட்டபோது "எனக்குத் தெரியாது!" என தன் குற்றத்தை உணராமலே 'ஆபேலை தேவனுக்கு முன்பாக நிறுத்திவிட்டான்!' கணவன் மனைவியாய் வாழும் நம் வீட்டில், நம்மில் யாராவது ஒருவர் "குற்றம் சாட்டும் ஆவி உடையவர்களாய் இருந்தால்" அது நம் பிள்ளைகளையும் கண்டிப்பாய் பாதிக்கும். உங்கள் வீட்டில் எவ்வளவு பெரிய பிரச்சனை ஏற்பட்டாலும், **'அங்கு குற்றம் சொல்லும் ஆவி இல்லாவிட்டால்'** தேவன் அந்த சூழ்நிலையில் இடைப்பட்டு சமாதானத்தை கொண்டு வருவது நிச்சயம்! அது எப்படியெனில், தர்ஷீஸ் கப்பலில் யோனாவினிமித்தம் ஏற்பட்ட ஓர் புயலுக்கு ஒப்பானது! "இந்த புயலுக்கு நான்தான் காரணம், என்னை கடலில் தூக்கி எறியுங்கள்!" என யோனா தன் குற்றத்தை கூறினான். அவன் தூக்கி எறியப்பட்டபோது, கப்பலில் கொந்தளிப்பு நின்றது!

**வழிவிலகிய ஆரோன்,** ஒரு பொன் கன்று குட்டியை செய்தபோது 'அதை அவனே வடிவமைத்தான்' என யாத்திராகமம் 32 - ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். ஆனால் மோசே மலையிலிருந்து இறங்கி

வந்தவுடன் "என்ன நடந்தது?" என ஆரோனிடம் கேட்டார். ஆனால் ஆரோனோ "அது, ஜனங்களின் பொல்லாப்பு" என மறைத்து கூறி விட்டார். இதன் விளைவாய், ஆரோனுடைய குடும்பத்திற்கு நடந்தது என்ன தெரியுமா? ஆரோனின் குமாரராகிய நாதாபும், அபியூவும் கர்த்தருடைய சந்நிதியில் 'அந்நிய அக்கினியை' கொண்டு வந்ததும்.... கர்த்தருடைய அக்கினி அவர்களைப் பட்சித்து, அவர்கள் செத்துப் போன துயரத்தையும் காண்கிறோம்! (லேவி.10:1,2). இந்த நிகழ்ச்சியின்போது, அங்கிருந்த நாதாப் அபியூவின் தகப்பனாகிய ஆரோன் 'பிறரை பழிசாட்டாமல்' பேசாதிருந்தான்! என வாசிக்கிறோம் (லேவி.10:3).

**ஆரோன் பேசாதிருந்ததற்கு ஓர் முக்கிய காரணம் "பிறரை குற்றம் சாட்டும் பாவத்தை, என் குமாரர்கள் 'அன்று' என்னிடமிருந்து கற்று கொண்ட தினிமித்தமே 'இன்று' அந்த பாவத்திற்கு விடையாக மரித்துப்போனார்கள்" என்ற தெய்வ உணர்வினால் ஆட்கொள்ளப்பட்டு பேசாதிருந்தான்!**

பிறரை குற்றம் சாட்டாமல், நம் பிழையை உணர்வது, நம் குடும்பத்தில் **பெரிய அற்புதம் செய்திட தேவனுக்கு வழிவகுக்கும்** என்பதை நாம் விசுவாசிப்போமாக!

'பிரச்சனை என' ஒன்று வரும்போதுதான் தீர்வு அல்லது விடையும் கிடைக்கும்! ஒரு வீட்டில் யாராகிலும் ஒருவர், எனக்கு எப்போதுமே பிரச்சனை இல்லை, வீட்டிலுள்ள மற்றவர்களிடத்தில்தான் பிரச்சனை என நீங்கள் கூறினால்.... உங்கள் வீட்டிற்குரிய அமைதியை கொண்டு வர, வருகை தந்த ஆண்டவர் 'பிரச்சனையை உணராத நபரின்' வீட்டிலிருந்து போய்விடுவார்.

ஆண்டவர் கூறியபடியே, பேதுருவுக்கு பிரச்சனை வந்தது! 'பேதுரு மறுதலிப்பான்' என்ற பிரச்சனை இல்லாவிட்டால், அந்த வேலைக்காரி பெண், பேதுருவை நச்சரிக்க வேண்டிய அவசியம் இருந்திருக்காது! இயேசு கூறியபடி 'சாத்தானும்' பேதுருவை புடைக்க வேண்டிய அவசியம் இருக்காது! நடந்த விந்தை என்னவென்றால், இந்த பேதுரு 'தன் ஆண்டவரை மறுதலித்த பிரச்சனையில்' அந்த **வேலைக்கார பெண்ணை குற்றம் சாட்டவில்லை!** இன்னும் ஆச்சரியமாய், தன்னை புடைத்த **பிசாசை கூட குற்றம் சாட்டவில்லை!** மாறாக.... மறுதலித்த தன் பிரச்சனைக்காக, பேதுருவே மனங்கசந்து அழுதார்! இதையெல்லாம் கண்டு, உள்ளம் மகிழ்ந்த ஆண்டவர், தான் உயிர்த்தெழுந்த பின்பு, பேதுருவிடத்தில் விரைந்தோடி வந்து அவனை தன் ஊழியத்திற்கென அபிஷேகம் செய்தார்! இந்த அற்புதம் நமக்கும் நம் வீட்டிற்கும் நம் சபைக்கும் இன்றும் என்றும் நிகழ்வதாக! ஆமென்.

– ராபர்ட் டேவிட் (பூனே)



# அன்ராநிக்கஸ்,

## தீரமான மரணத்தால், ரோமானியர்களை ஸ்தம்பிக்கச் செய்தவர்!

**(AD 303)**

அன்ராநிக்கஸ், எபேசு தேசத்தில் வாழ்ந்த இயேசுவின் உண்மை சீஷன்! அந்நாட்களில் ஆண்ட ரோம அரசன், அன்ராநிக்கஸின் கிறிஸ்தவ விசுவாசத்தை கைவிடுமாறு கட்டளையிட்டார். அதை மறுத்த அன்ராநிக்கஸை ரோம அரசன் சிறையிலிட்டான். அந்த சிறையில் ஏற்கெனவே புரோபஸ், தராகஸ் ஆகிய இரண்டு பரிசுத்தவான்கள் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்திற்காக அடைக்கப்பட்டிருந்தார்கள்.

அவர்கள் ஒவ்வொருவராக அழைக்கப்பட்டு "கிறிஸ்தவ விசுவாசத்தை கைவிடா விட்டால்" சித்திரவதைகளும் மரணமும் ஏற்படும்! என அச்சுறுத்தப்பட்டார்கள். புரோபசையும் தராகஸையும், ரோம வீரர்கள் கொடூரமாய் துன்புறுத்தியதை அன்ராநிக்கஸ் கண்டார். அவர்களை 'ரோம சர்க்கஸ் திடலுக்கு' அழைத்துச் சென்று சாட்டையினால் அடித்தார்கள்! அவர்களுடைய பாதங்களை, பழுக்க காய்ச்சிய இரும்பு கம்பிகளால் சுட்டு வதைத்தார்கள்! இதையெல்லாம், கூடி இருந்த ரோமானிய பொதுமக்கள் கண்டு, கைகொட்டி சிரித்து மகிழ்ந்தார்கள். துவண்டு விழுந்த புரோபஸையும், தராகஸையும் தூக்கி நிறுத்தி, ஓர் இரும்பு ஆயுதத்தை அவர்கள் விலாவிலும் முதுகிலும் சொருகி எடுத்தார்கள். இன்னமும் மரிக்காதிருந்த அவர்களை, கூர்மையான கத்தி கொண்டு அவர்களை வெட்டிக் கொன்றார்கள்!

பின்பாக அன்ராநிக்கஸிடம் வந்த ரோம வீரர்கள் "இப்போதாவது நீ விசுவாசிக்கும் கிறிஸ்துவை மறுதலித்து ரோம தேவதைகளுக்கு அடிபணிவாயா?" என கேட்டார்கள். அதற்கு அன்ராநிக்கஸ் "நான் அன்றும் கிறிஸ்தவன்.... என்றும் கிறிஸ்தவனாகவே இருப்பேன்! கிறிஸ்துவே எனது மறைவிடம்! என்னை தாங்கும் கன்மலை! என்னை சூழ நின்று காக்கும் உயிருள்ள கிறிஸ்துவை மறுதலித்து, உங்கள் தேவதைகளுக்கு ஒருபோதும் சிரம் தாழ்த்தேன்! அல்லது உங்கள் பேரரசருக்காக அஞ்சிடவும் மாட்டேன்! உங்களின் வாதைகள் எதுவோ அதை என்னில் நிறைவேற்றுங்கள்..... அதன் முடிவில், என்னுடைய உறுதியிலிருந்து சிறிதும் பிறழாதவன் என்பதை நீங்களே கண்டு கொள்வீர்கள்!" என அந்த சர்க்கஸ் திடல் எதிரொலிக்கக் கூறினார்.

ஆத்திரமடைந்த வீரர்கள் கொடிய சாட்டையால் மாறி மாறி அடித்தார்கள். உடலெங்கும் பீறி வந்த இரத்தத்தில் உப்பை அள்ளி அள்ளி கொட்டினார்கள்! பின்பு, பசியோடு நின்ற சிங்கங்களை அவிழ்த்துவிட்டார்கள்! சீறி வந்த சிங்கங்கள்..... அவர்களை முகர்ந்து பார்த்துவிட்டு, அமைதியாகப் படுத்து கொண்டன! ஆத்திரமடைந்த வீரர்கள், கொடுவாள்களோடு அவரிடம் வந்து, தங்கள் ஆத்திரம் தீர வெட்டிக் கொன்றார்கள். அன்ராநிக்கஸ் தன் விசுவாசத்திற்காக தன் இறுதி மூச்சு வரை நிலைத்து நின்று, ஜெயமாய் மரித்ததைக் கண்ட ரோமானிய மக்கள், மௌனத்துடன் கலைந்து சென்றார்கள்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## மாய லோகம் கை நழுவும்! உங்கள் ஆன்மா....?

இந்த உலகத்திலுள்ள ஒவ்வொன்றும், கடந்து மறைந்து கொண்டிருக்கின்றன. நமக்குச் சொந்தமான உடமைகள், செல்வங்கள், ஆஸ்தி, ஐசுவரியங்கள்.... என்றெல்லாம் வீராப்பு பேசிக்கொள்ளுபவைகள் அனைத்தும், சொற்ப காலத்துக்கு நாம் கடனாகப் பெற்றவைகளேயன்றி பிறிதொன்றுமில்லை! மனுஷன் தனக்கென வாரிக்கொண்ட அனைத்தும்..... ஒருநாளில், அவன் விரும்பிய அல்லது விரும்பாத யாரோ சிலருக்கு, அவனே விட்டுவிட்டுச் செல்லுபவைகள் என்பதை மானிடர் சிந்திக்க மறந்து விடுகிறார்கள்! 'என்னுடைய சொந்த வீடு' என அவன் பெருமை பாராட்டி கூறிய ஸ்தலம்.... இப்பொழுது வெறும் சமதரையாக உள்ளது! ஆ, அந்த வீடு புல்டோசர் வைத்து தகர்க்கப்பட்டு, மண் தரையாகிவிட்டது! எல்லாம், இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விட்டது.

ஆம், உண்மைதான், உலகில் காணப்படுபவைகள் அனைத்தும் நிலையான வையல்ல. அவைகள் அனைத்தும் நம்மை விட்டு கடந்து செல்லக் கூடியவைகள்! அவைகளை நாம் பிடித்து வைத்திருக்க முடியாது. இந்த உலகத்தில் வாழ்ந்த மன்னர்களுக்கெல்லாம், மன்னாதி மன்னனாக வாழ்ந்து புகழ்பெற்றவனும் வலிமைமிக்கவனுமான சாலொமோன் மாமன்னர் "மாயை, மாயை எல்லாம் மாயை" (பிரசங்கி.1:1) என்று கூறிவைத்துச் சென்றுவிட்டார்.

தான் சிருஷ்டித்த ஜனங்கள்தான் தேவனுக்கு முக்கியமானவர்கள். ஆகையால்தான் அவர் தமது ஒரேபேரான குமாரனைத் தந்தருளி, இவ்வளவாய் நம்மேல் அன்புகூர்ந்தார் (யோவான்.3:16). அத்துடன், ஒருவராகிலும் கெட்டுப்போவதும் அவருடைய விருப்பமல்ல எனவும் வாசிக்கிறோம் (2பேதுரு.3:9). ஆனால், மாயையில் சிக்கியிருக்கும் மானிடர்களோ "தன் சிருஷ்டிகரே" அழிவில்லா நித்திய இரட்சகராய் இருப்பதை அறியாதிருப்பது துயரமல்லவா? வாலிபனே, உன் ஆன்மாவின் நிலை ஒன்றே நித்தியமானது! உன் பாவங்களை மன்னித்து, நித்திய ஜீவனை தர வந்த, இரட்சகர் இயேசுவை விசுவாசித்து இரட்சிக்கப்படுவதே, இந்த மாய வாழ்விற்கு நீ அடைந்திடும் விடையாகும்!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.